**In the Court of the Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC 30/2021** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : **ஜெயபாரதி** | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : **கதீஸ்குமார்** | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(Accused absent petition filed and allowed )

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.11.2025

---

**முதல் விசாரணை**

நான் A. இராமநாதபுரத்தில் வசித்து வருகிறேன். எனது கணவர் கதீஸ்குமார் மற்றும்எ னது மாமியார் சகுந்தலா, எனது நாத்தனார் கலா, அவரது கணவர் போஸ் ஆகியோர் மீது புகார் அளித்துள்ளேன். கடந்த 25.05.2012ம் தேதி எனக்கும் 1வது எதிரிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது எதிரிகள் 50 பவுன் நகையும், இரண்டு லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும் கேட்டார்கள். அதற்கு எனது அப்பா தற்போது 25 பவுன் நகையும், 2 லட்சம் மதிப்புள்ள சீர்வரிகை பொருட்களும் கொடுத்தார்கள். அதன்பின்பு இரண்டு மாதம் கழித்து 90,000/- ரூபாய் மதிப்புள்ள ஹீரோ ே ஹாண்டா ஸ்பிளேண்டர் வாகனத்தையும், இரண்டு மாடுகளையும் கேட்டார்கள் அதையும் எனது பெற்றோர்கள் வாங்கி கொடுத்தார்கள். 2013ம் ஆண்டு ஒரு ஆண் குழந்தையும், 2015ம் ஆண்டு மற்றொரு ஆண் குழந்தையும் எங்களுக்கு பிறந்தது நாங்கள் நல்லமுறையில் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தோம். கடந்த 17.03.2019ம் தேதி எனது முதல் மகன் சரணுக்கு காது குத்து விழா வைத்திருந்தோம். அதற்கு எனது பெற்றோர்கள் ஒரு லட்சம் பணமும், ஒரு பவுன் தங்க தோடு, ரூபாய் 50,000/- பொருட்களும் செய்தார்கள். அந்த

விழாவில் வந்த மொய் பணத்தை வைத்து 5 செண்டு நிலம் உசிலம்பட்டியில் வாங்கினார். மேற்படி இடத்தில்  வீடு கட்ட வேண்டும் என்று சொல்லி எனது அப்பாவிடமிருந்து 25 பவுன் நகை அல்லது  5 லட்சம் பணம் வாங்கி வா என்று சொன்னார், அதற்கு நான் பதில் எதுவும் சொல்லவில்லை. அதன்பின்பு  2 முதல்  4 எதிரிகள் மேற்படி  நகையை சம்பந்தமாக என்னிடம் மீண்டும் மீண்டும் கேட்டு கொண்டிருந்தார்கள். நான் எதுவும் சொல்லவில்லை என்பதால் என்னையும் எனது இருமகன்களையும் அவுசாரி தேவடியா என்று அசிங்கமாக பேசி எங்களை அடித்து வீட்டை விட்டு எதிரிகள் விரட்டிவிட்டார்கள். கடந்த 2021ம் ஆண்டு வரை எனது கணவர் வீட்டிற்கு அழைத்து செல்ல யாரும் வரவில்லை.  எனது அப்பா எங்களுக்கு பொதுவான உறவினாரான எங்களது மாமா தங்கசாமி என்பவர் வீட்டில் வைத்து பஞ்சாயத்து பேசினார். மேற்படி பஞ்சாயத்திலும் எதிரிகள் மேற்படி நகையும் பணத்தையும் கேட்டார்கள் அதை கொடுத்தால் தான் பேச்சு வார்த்தை பண்ண முடியும் என்று சொல்லி  பஞ்சாயத்தில் இருந்து விலகிசென்றுவிட்டார்கள். நான் அவர்களை மறித்து கேட்டபோது எதிரிகள் அனைவரும் சேர்ந்து என்னையும் எனது பிள்ளைகளையும் அடித்து  எனது சேலையை கிழித்து ஒழுங்காக மேற்படி 25  பவுன் நகையும் அல்லது 5 லட்சம் பணமும் கொண்டு வா இல்லையென்றால் உன்னுடன் வாழமுடியாது என்றும் மீறி பிரச்சனை செய்தால் உன்னையும் உனது குழந்தைகளையும் கொன்றுவிடுவோம் என்று மிரட்டல் விடுத்தார்கள். அருகில் இருந்த ராமு, கல்யாணி, தங்கசாமி,  எனது பெற்றோர்கள் ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டார்கள். நகையையுடன் வந்தால் வீட்டிற்கு வா என்று சொல்லி எதிரிகள் சென்றுவிட்டார்கள். அதன்பின்பு நான் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள

கையெழுத்து என்னுடையது தான் . அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :** இல்லை

S.d. Jeyabharathi
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti